

லயன் காமிக்ஸ்
நடுக்கடல் நரகம்!


அடுத்த வெளியீடு!
அட்டகாசமாய் வருகிறது!
மரண மண்டலம்!
மின்னல் படையினரின் ஆக்ஷன் திரில்லர்!
லயன் காமிக்ஸ்
விலை ரூ. 5/-

BATCH NO 1062/8102

ஆகஸ்ட் - 1994

வெளியீடு நிர்: 105



வாசக நண்பர்களே,

சமீப காலத்தில் வந்ததொரு நிறைவான இதழ் ''**மந்திர மண்ணில் மாடஸ்டி**'' என்பது எனது - உங்களது - ஏகோபித்த கருத்து! கதை - போட்டிகள் - வாசகர் பகுதி - கட்டுரைப் பகுதி - க்ரைம் க்விஸ் - என்று அனைவரின் taste க்கும் ஏற்றவாறு இதழ் அமைந்திருந்தது குறித்து பல பாராட்டுக் கடிதங்கள்! குறிப்பாக - ''**கதை சொல்லும் படங்கள்**'' கட்டுரைத் தொடருக்கு அருமையான வரவேற்பு கிடைத்துள்ளது! Thanks a lot.

திறமைசாலிகளான நமது வாசகர்கள் அனுப்பும் கதை; கார்டூன்; போட்டிகள் போன்ற வற்றை புதியதொரு பகுதியில் அறிமுகப்படுத்தி - அந்தப் பகுதிக்கு உங்களையே பெயரிடச் சொல்லிக் கேட்டிருந்தேன் அல்லவா? "ரீடர்ஸ் கார்னர்; ஹாட்-ஷாட்ஸ்; பூமராங்; ஹெலி-கார்; வாசகர் வட்டம்" என்று விதம் விதமான பெயர்களை Suggest செய்து வாசகர்கள் எழுதியுள்ளனர். அவற்றில் எனக்கு அவ்வளவாகத் திருப்தியில்லை;

லயன் வாசகர்களிடையே உள்ள அதீத திறமைசாலிகளை வெளிச்சம் போட்டுக் காட்டும் பகுதி என்பதால் ''**ஸ்பாட்-லைட்**'' என்று பெயரிட்டுள்ளேன்! (பொருத்தமாக உள்ளதா?) இம்மாத **ஸ்பாட்-லைட்டில்** ஒரு இளம் ஓவிய வாசகரின் (வயது 15 மட்டுமே!) படைப்பு இடம்பெற்றுள்ளது! பாருங்கள் - பாராட்டுங்கள்!

இம்மாதம் - புதிய ஹீரோ பீட்டர் பாலண்டைனின் சாகஸமும்; ரிப்போர்டர் ஜானியின் சாகஸமும் உங்களை எதிர்நோக்கியுள்ளன. பீட்டர் பாலண்டைனின் கதை யதார்த்தமான இன்றைய நாகரீகத் தலைமுறைக்குப் பரிச்சயமில்லாததொரு சூழலில் மையம் கொண்டுள்ளது. வழக்கமான துப்பறியும் கதைப் பாணியிலிருந்து விலகியிருக்கும் இந்த அட்வென்சர் பற்றிய உங்கள் எண்ணங்களை எழுதியனுப்புங்கள்! ரிப்போர்டர் ஜானியின் கதை மிக மிக வித்தியாசமானதொன்று! நிச்சயம் ரசிக்கப் போகிறீர்கள்!

அடுத்த மாதம் மின்னல் படையினரின் ''**மரண மண்டலம்**'' முழு நீள சாகஸமாக வருகிறது! அட்டகாசமான சித்திரங்களும்; அதிரடி action - ம் கொண்டது இந்த ஜெட் வேகக் கதை! அக்டோபர் மாதம் வரயிருக்கும் **தீபாவளி மலர் (இரத்தப் படலம் V )** வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன!

இம்மாதம் 15-ம் தேதி லக்கி லூக்கின் காமெடி ஸ்பெஷலாக ஜெஸ்ஸி ஜேம்ஸ் ரூ. 6/- விலையில் வருகிறது! படிக்கத் தவறாதீர்கள்! மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!



அன்புடன்,

# “மாதம் ஒரு வாசகர்”



| | |
|---|---|
| வாசகர் பெயர் | அ. முருகுவேள் பாண்டியன் வயது : 14 |
| முகவரி | S/o. A.M.M. அம்பிகாபதி<br>அழகாபுரி புதுப்பட்டி (Post)<br>அலங்காநல்லூர் (Via), மதுரை மாவட்டம்<br>PIN - 625 501 |
| பொழுது போக்குகள் | பேனா நட்பு, புத்தகங்கள் படிப்பது. |
| லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? | 11 வயது முதல் |
| லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி? | சகோதரி மூலமாக |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரிக்கைகள் என்ன? | முரசொலி, தினமலர்<br>தி ஹிண்டு |
| இதுவரை வந்த லயன் காமிக்ஸ் கதைகளில் நீங்கள் மிகவும் ரசித்துப் படித்தது எந்தக் கதை? | மரண ராகம்,<br>மாஸ்கோவில் மாஸ்டர் |
| உங்களைத் தவிர வேறு யாரும் வீட்டில் லயன் காமிக்ஸ் படிக்கிறார்களா? | ஆம். (அப்பா, அக்கா) |
| படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள்? | பிடித்த இதழை சேர்த்து வைத்து விடுவேன். பிடிக்காத இதழை விற்று விடுவேன். |

# க்ரைம் க்விஸ் - 11 விடை

"ஒரு திகில் பயணம்" இதழில் வெளியான க்ரைம் க்விஸ் 11 க்கு ஏராளமான வாசகர்கள் சரியான விடையனுப்பியுள்ளனர். (இம்முறை போட்டியும் சற்று சுலபம்தான்!) குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று அதிர்ஷ்டசாலிகள் :

1) **D. சீனிவாசன்**
C/o. கற்குவேல் கூல் டிரிங்க்ஸ்,
2, ராமானுஜ ஐயர் தெரு,
பழைய வண்ணை, சென்னை - 21.

2) **S. ராஜேஷ்குமார்**
S/o. சம்பந்தம்,
அருண்மொழி தேவன்
தச்சக்காடு (P.O.)
சிதம்பரம் (TK.)
B. முட்லூர் (Via)

3) **V. பாரதி**
C/o V. ராஜ் நாராயணன்,
17, மாருதி வீதி, அம்மன்நகர்,
திருச்சி - 21.

*அனைவருக்கும் ரூ. 75/- மதிப்புள்ள பரிசு அனுப்பப்படும்!* Congrats!

## சரியான விடை

சாட்சி சொல்ல வரும் நபர் பாங்க்கில் பணம் எடுத்துக் கொண்டு வரும்போது சண்டையைப் பார்த்ததாகக் கூறுகிறார்! ஆனால் இன்ஸ்பெக்டர் டேஞ்சர் சண்டை நடந்த இடத்திற்கு வந்த போதே மணி 5 30! அந்த நேரத்தில் பாங்க்குகள் மூடியிருக்குமே?! பணம் எடுப்பது எப்படி சாத்தியம்? ஆக சாட்சி பொய் சொல்லுவது உறுதியாகிறது!

*இம்மாத க்ரைம் க்விஸ் [14]க்கான கூப்பன்*

க்ரைம் க்விஸ் (14)
C/o. பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
த.பெ.எண். 374, சிவகாசி - 626 123

– விடை அனுப்ப கடைசித் தேதி : 15-9-'94

காட்டிலாகா அதிகாரி பீட்டர் பாலண்டைன் தோன்றும்

# நடுக்கடல் நரகம்

இரண்டாம் உலக யுத்தம் முடிந்திருந்த காலம் அது! உலகமெங்கும் ஆதிக்கம் செலுத்தி வந்த இங்கிலாந்தின் அடிமை ராஜ்யங்கள் படிப்படியாக விடுதலையடைந்து கொண்டிருந்தன! தென் மண்டலத்தின் பெரும்பகுதி இன்னமும் நாகரீகத்தின் பிடியில் சிக்காமல் பழமையில் மூழ்கிக் கிடந்தது! பசுபிக் கடலில் சிதறிக் கிடந்த பல தீவுக் கூட்டங்களில் ஒன்றான நியூ கினியாவில் காட்டிலாக அதிகாரியாகப் பணிபுரிந்தார் பீட்டர் பாலண்டைன்! எதற்கும் அஞ்சா நேர்மையான அதிகாரி அவர்!






வன ரோந்துப்படை அதிகாரியான பீட்டர் விமான நிலையத்தில் புதிய மருத்துவ அதிகாரியின் வரவுக்காக காத் திருந்தார். அதே சமயம் பிறிதொரு காரணத் திற்காக எஸ்டேட் அதிபர் புரூனோவும் அங்கே காத்திருந்தார்.
தெற்கே பயணமா?
எனக்கு மனைவியாகப் போகும் பெண்ணை சந்திக்க வந்திருக் கிறேன்!
MANDAT
வாழ்த்துக்கள்!
ஜெர்மன் நாளிதழ் ஒன்றில் மணமகள் கேட்டு விளம்பரம் கொடுத்திருந்தேன்! இன்று அவள் இங்கு வருகிறாள்!
அப்படி யானால், உன்னைப்பற்றி அவளுக்கு எதுவுமே தெரியாது என்று சொல்லு
ஹா! ஹா! நோ. அவளுக்கு என்னுடைய போட்டோ ஒன்றை அனுப்பினேன். ஆனால் அது ரொம்ப காலத்திற்கு முன்பு எடுத்த படம்!
ஜுவல் இன் செல் தீவைப் பார்த்த உடனேயே அவள் மனம் மயங்கி விடுவாள்!
கடவுளே... அந்தப் பெண்ணை நீ தான் காப்பாற்றணும்!
உன்னைக் கண்டு மயங்க வேண்டிய தல்லவா முக்கியம்?


அதுபற்றி யாருக்குக் கவலை? அவள் மூலம் இங்கே - நியூ கினியாவில் எனக்கு ஒரு மகன் பிறந்து இந்த எஸ்டேட்டை அவன் ஆளவேண்டும்! என்னுடைய தந்தை செய்த தவறை செய்து சொத்தை இழக்க நான் தயாராக இல்லை!
1914 ல் உன் தந்தை ஜெர்மானியப் பிரஜை யாக இருந்தார்...! 1948ல் தான் திரும்ப எஸ்டேட்டை குத்தகைக்கு எடுக்க முடிந்தது... இல்லையா?
யா! ஆனால் என்னுடைய மகன் நியூகினியா பிரஜையாகி விடு வானுக்கும்!
புரிகிறது!
எனக்கு மகன் பிறந்த உடன் ஜூடி எனக்குத் தேவைப்பட மாட்டாள்! ஒரு கிராமத்துப் பெண் கூடப் போதும் - என் மகனை வளர்க்க!
பிறக்கும் குழந்தை பெண்ணாகப் பிறந்தால் பயல் வெறியனாக மாறிவிடுவான்!
MANDA AIRLIN
VH-3
இந்த மிருகத்திடம் வந்து சிக்க உலகின் பாதி தூரத்தைக் கடந்து வரும் அந்தப் பேதைப் பெண்ணை நினைத் தால் பரிதாபமாக இருக்கிறது!
வாவ்! அவளைப் பாரேன்! போட்டோவில் இருப்பதைவிட டக்கராக இருக்கிறாள்?!



பொறு! அவள் தான் ஜூடி என்று என்ன நிச்சயம்?
நீதானே ஜூடி ஜாண்டர்? நான் புருனே! நான் அனுப்பிய போட்டோ விலிருந்து என்னை அடையாளம் கண்டு கொள்வாய் என்றல்லவா நினைத்தேன் !
நோ. நீ... நீங்கள் அனுப்பிய படத்திற்கும் நேரில் பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. பயணம் ரொம்ப கடினமாக இருந்தது! நான் எங்காவது ஓய்வு எடுக்க முடியுமா?
நிச்சயமாக! நமக்காக இங்குள்ள ஓட்டலில் அறை ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிறேன்!
தனித்தனி ரூம் தானே?
ஓ... ஏற்பாடு செய்தால் போச்சு! உன்னைக் கண்டவுடன் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு விட்டேன்! அவ்வளவுதான்!
நீங்கள் தானே டாக்டர் வின்சென்ட்?
யெஸ்! என்னை வின்னி என்றே கூப்பிடலாம்
என் பெயர் பீட்டர்... பீட்டர் பாலன்டைன்!


அந்த ஜோடிப் பொருத்தம் நிலைக்கும் என்று பட வில்லை எனக்கு!
ஜூடிக்கு தனது வருங்கால கணவனை அவ்வளவாகப் பிடிக்க வில்லை என்றே தெரிகிறது. ஆனால் நானும் வின்னியும் அவசரமான விஷயம் குறித்துப் பேச வேண்டியுள்ளது!
இங்கு ஏற்பட்டுள்ள பிரச்சனை குறித்து உங்களைச் சந்தித்துப் பேசும்படி வட்டார மருத்துவ அதிகாரி என்னைக் கேட்டுக் கொண்டுள்ளார்!
ஹ்ம்ம்ம்... சொல்லுங்கள்!
கிறிஸ்தவ மத பிரச்சாரர்களின் படகு ஒன்று இங்கு வந்தது. இங்குள்ள ஏதோ ஒரு தீவில் போலியோ நோய் வேகமாகப் பரவி வருவதாக தகவல் தெரிவித்தனர்.
அப்படியானால் நான் உடனே அங்கு போயாக வேண்டும்! நோய் பரவாமல் தடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்!


நாளை நாம் இங்கிருந்து புறப்படுவோம்! அதற்கு முன்னர் வேறு ஒரு விஷயம் உள்ளது?
என்ன சொல்கிறீர்கள்?
அந்தத் தீவிலிருந்து தான் புரூனே தனது தென்னை மரத் தோப்பில் வேலை செய்ய ஏராளமான தொழிலாளிகளைக் கொண்டு வருகிறான்!
கொஞ்ச காலத்திற்குப் புரூனே அதை மறந்து விட வேண்டியது தான்! வியாதிக்குக் காரணம் என்ன என்பது தெரியும் வரை அவனுக்கு
அங்கிருந்து ஒரு ஆள் கூட கிடைக்காது! இதனால் அவன் எதுவும் பிரச்சனை எழுப்புவான் என நினைக்கிறாயா?
நாளை கிழக்கே சூரியன் உதிக்குமோ இல்லையோ -ஆனால் புரூனேவால் நிச்சயம் பிரச்சனை வரும் என்பது உறுதி!
என்னோடு விமானத்தில் வந்த ஜூடி பயிற்சி பெற்ற நர்ஸ்! தீவு வேலையாட்களுக்கு உடம்புக்கு முடியவில்லையென்றால் கூட அவளை வைத்து வைத்தியம் பண்ணி விடலாம் என்று புரூனே நினைக்கலாம்!
அந்தத் தீவுக்கு நானும் உங்களுடன் வருவது தேவலை என்று நினைக்கிறேன்!


நோய் தடுப்புப் பணிக்காக ஒரு படகு புறப்படத் தயாராகியது! பீட்டர் பாலண்டைன் புருஞேலைவ அப்போது சந்தித்தார்...
நாளை புறப்படும் ரோந்துப் படகு ஜுவல் இன்செல் தீவைத் தாண்டித் தான் செல்கிறது!
நீங்கள் வீடு திரும்ப இப்போதைக்கு இதுதான் வழி! இதை விட்டால் இன்னும் சில வாரங்களுக்கு ரோந்துப் படகு கிடையாது!
அப்படி என்ன அவசரம்? நான் வீடு திரும்பு முன்பு இவளைத் திருமணம் செய்ய வேண்டும் என நினைக்கிறேன்!
திருமணத்திற்கு முன்பே நீங்கள் எங்கே -எப்படி -வாழ்கிறீர்கள் என்பதைப் பார்க்க விரும்புகிறேன்! திருமணம் குறித்து ரொம்ப அவசரப்படத் தேவை இல்லை!
இங்கே - நியூ கினியாவில்தான் சர்ச் இருப்பதால் திருமணத்தை இங்கு வைத்துத்தான் நடத்தவேண்டுமென்பது கட்டாயமாகிறது! இப்போது என் தீவுக்குப் புறப்பட்டால் நாம் திரும்ப இங்கே வர எவ்வளவு நாட்களாகுமோ -சொல்ல முடியாது!
நீங்கள் ரோந்து முடித்துவிட்டுத் திரும்பி வரும் போது எங்களையும் அழைத்து வந்து விடுகிறீர்களா மிஸ்டர் பீட்டர்?
நிச்சயமாக. ஆனால் அதற்குக் கொஞ்ச நாளாகும்! அருகிலிருக்கும் தீவுகளில் போலியோ நோய் பரவியுள்ளதாகத் தகவல் வந்துள்ளது! அதனால்தான் அங்கு போகிறோம்!


அப்படியானால், என்னாலும் உதவி செய்ய முடியும்! நான் பயிற்சி பெற்ற மருத்துவப் பணிப் பெண்ணாக்கும்!
என்னுடைய வேலைக்காரர் களுக்கு மட்டும் நீ வைத்தியம் பண்ணினால் போதும்!
புருனே - நீ வேலைக்கு ஆள் எடுத்து வரும் தீவில்தான போலியோ உள்ளது! அவர்கள் மூலமாக உன்னுடைய ஜுவல் இன்செல் தீவிலும் நோய் பரவிவிட்டிருக்கலாம்!
HOTEL TAR GAU
அப்படி ஏதாவது நடந்தால் தீவு நிர்வாகத்தை நான் சும்மா விட மாட்டேன்.
நீ சட்ட விரோதமாகவே அங்கிருந்து வேலைக்கு ஆட்களைக் கொண்டு வருகிறாய் என்பதை மறந்து விடாதே!
நீ.. நீ... நாசமாய் போ பீட்டர்!
மறுநாள்-
மிஸ் ஜுடியின் லக்கேஜை வாங்கி உதவுங்கள்!
காப்பொரல் - அங்குள்ள மருந்துப் பொருட்கள் மீது கவனம் இருக்கட்டும்!... மற்ற பொருட்களை அதன்மீது போட்டு அடியில் புதைத்து விடாதீர்கள்!
யெஸ், சார்!
தேங்க் யூ!


ஜூவல் இன்செல் தீவைச் சுற்றியுள்ள கடற்பாறைகளை நெருங்க நாளைக் காலையாகி விடும்!
ஹேய்! பீட்டர்! அந்த அழகான பெண், பெருச்சாளி புருனோவை கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாளா?
அவன் அப்படி நினைக்கிறான்! ஆனால் அது நடக்குமென்று நான் நினைக்க வில்லை..!
அது இருக்கட்டும் - மற்ற தீவுகளிலிருந்து வரும் ஒரு திருட்டுக் கும்பல் கடல் பாறை களிலுள்ள சிப்பிகள் அனைத்தையும் சுரண்டுவதாகக் கேள்விப்பட்டேனே!
அவர்களில் யாரையாவது நாம் கண்டால், கடற்படையுடன் தொடர்பு கொள்வோம். அவர்கள் வந்து பார்த்துக் கொள்வார்கள்!
சிப்பிகளைத் திருடுவது அப்போது பெரிய குற்றம்!
அடேச்சே -அவன்களோடு நாமே நேரடியாக மோதலாம் என்று நினைத்துக் கொண்டி ருந்தேன்!


என்னுடைய தீவைச் சுற்றியுள்ள பாறை களில் எவனாவது கை வைத்தால் நான் கடற்படையை தேடிக் கொண்டிருக்க மாட்டேன். நானே ஒரு வழி பண்ணி விடுவேன்!
அது பற்றி எனக்குக் கவலை இல்லை புருனோ! ஆனால் சிப்பி சுரண்டுவதில் உன் தொழிலாளர்கள் யாரும் சம்பந்தப் பட்டிருக் காமல் பார்த்துக் கொள்!
ப்யூ!
மறுநாள் காலை— புருனோவின் ஜுவல் இன்செல் தீவு வந்தது!
மோசமான நோயால் பாதிக்கப்பட்டுள்ள மற்றொரு தீவுக்கு இப்போது நான் போக வேண்டும்! நான் திரும்பிய உடன் உங்களுக்கு உதவுகிறேன்!
பீட்டர் சார்... இந்த திருட்டுக்கும்பலை நீங்கள்தான் ஒடுக்க வேண்டும்! இல்லை யென்றால் பாறைகளையே முழுங்கி ஏப்பம் விட்டு விடுவார்கள்!
சீக்கிரம் திரும்புங்கள்! புருனோவைக் கண்டா லும் பிடிக்கவில்லை! கொள்ளையர்களைக் கண்டாலும் பிடிக்க வில்லை!
குட்லக் மிஸ்டர் பீட்டர்!
போலியோ பரவியுள்ள தீவிலிறங்கி நானும் டாக்டரும் இருக்கும் போது மற்ற தீவு களுக்குப் போய் அந்தக் கொள்ளைக் கும்பல் கண்ணில் படுகிறதா என்று நீ பார்!
பாஸ் - கப்பலுக்கு வலது புறம் ஒரு படகு வருகிறது!


இந்தப் பகுதியில் வேறு எந்தப் படகின் நட மாட்டமும் கிடையாதே! இது அந்த திருட்டுக் கும்பலின் படகாகத் தானிருக்க வேண்டும்!


இது அந்த போலியோத் தீவிலிருந்துதான் வருகிறது!!! ஆண்டவனே - அவர்கள் எல்லா இடங்களிலும் நோயைப் பரப்பி விடும் அபாயம் உள்ளதே!


இப்போதைக்கு அவன் களை விரட்டிப் பிடிக்க வழியே இல்லை! புதிதாக ஏதாவது ஒரு தீவில் இறங்க மாட்டார்களென நம்புவதைத் தவிர வேறு ஏதும் செய்ய முடியாது! ஹம்ம்ம்....
ஓ.கே... ஒருவாரத்தில் நாம் பார்க்கலாம்! போலியாவால் பாதிக்கப் பட்டவர்கள் மற்ற தீவில் யாரேனும் உள்ளன ரா என்று விசாரி!
எதிரே வரும் பெரிய அலையைக் கவனிப்பா! அல்லது நீயும் ஆஸ்பத்திரியில் போய் படுக்க வேண்டிவரும்!
தீவு வாசிகளின் படகில் டாக்டரும், பீட்டரும் புறப் பட்டனர்.


இறுக்கப் பிடித்துக் கொள்ளுங்கள் வின்னி தீவில் கொண்டு போய் சேர்த்து விடுவான்கள்!
கடவுள் காப் பாற்றுவாராக!
பத்திரமாகப் பயணம் முடிந்தது -
மருந்துகளைக் கொண்டு போய் அந்தக் குடிசையில் இறக்குங்கள்!
நோயாளிகள் எங்கு உள்ளனர்?
எல்லாரும் தேவாலயத்தில் உள்ளனர்!
தேவாலயத் திலா?
அதுவும் சரி தான்! இந்தத் தீவில் உள்ள ஒரே பெரிய கட்டிடம் சர்ச் தான்!
சிப்பித் திருடர்கள் இங்கு வந்தார்களா?
யெஸ்!


இங்கு வந்து என்ன செய்தார்கள்?
அவர்களிடம் இங்கு பரவியுள்ள வியாதி பற்றிச் சொன்ன உடன் ஓடிப் போய்விட்டனர்!
கடவுளுக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும்!
நீங்கள் வேலையை ஆரம்பியுங்கள்! நான் தீவை ஒரு ரவுண்டு அடித்து வருகிறேன். நோயாளிகளின் உற வினர்கள் உங்களுக்கு ஒத்தாசை செய்வார்கள்!
ஓ.கே. பீட்டர். உன்னைப் பிறகு பார்க்கிறேன்!
இந்த நோய் வந்ததற்கான காரணம் எனக்குத் தெரியும் பாஸ்!
குட்! என்னிடம் சொல்லுங்கள்!
மரத்திலிருக்கும் "வேதாளம்" செய்யும் வேலை இது! இது இருக்கும் இடம் எனக்கு தெரியும்!
வேதாளம் நம்மை நோயாளிகளாக்காது!
தன்னுடைய மரத்தை தீவுவாசிகள் வெட்ட நினைத்ததால்தான் வேதாளம் நோயைப் பரப்பி பழி வாங்குகிறது!
ஓகோ!
என்னிடம் அந்த மரத்தைக் காட்டினால் நன்றா யிருக்கும்!


இதோ - இந்த மரம் தானு? இரவு நாம் மீண்டும் இங்கு வருவோம்! சரியா கார்பெரால்?
நா-நானும் உங்களுடன் வ-வரணுமா சார்?
உள்ளூர்க் காரர்களின் மூட நம்பிக்கைகளை அசட்டை செய்யக் கூடாது என்பது எனக்குத் தெரியும். இது மூடத்தனம் என்று நிரூபிக்கும் வரை இவர்கள் சொல்வதற்கு மண்டையை ஆட்டியே தீர வேண்டும்!
நாம் எப்போது திரும்பி வருவது?
வானில் நிலவு தோன்றிய உடன் வரலாம்?
இரவும் வந்தது - நிலவும் வந்தது!
அங்கே பாருங்கள்! நம்மைப் பார்த்துக் கை யசைக்கிறது வேதாளம்!
உள்ளூர் ஆசாமி யாகத்தான் இருக்க வேண்டும். வெள்ளை நிற பெயின்டையோ, பவுடரையோ பூசிக் கொண்டு நிற்கிறான்!

F. 2.


மரக்கட்டை ஒன்றை எடுத்துக் கொடு!
இது பேய்தான்! வேதாளம் - மர வேதாளம்!
இப்போது பார்த்து விடுவோம்!
நம்ப முடியவில்லை! நான் வீசிய மரக்கட்டை அவனை ஊடுருவி யல்லவா செல்கிறது?
பேய்! பேய்!
நா - நாமும் போய் விடு வோம் சார்! இது வேதாளம் தான்!
நம்முடைய வயோதிக நண்பனும் அப்படி நினைத்து ஓடி விட்டார்!
நான் போய் அவரைக் கண்டு பிடிக்கிறேன்!
நானும் உன் னோடு வருவது தான் நல்லது என நினைக் கிறேன்!


மறுநாள் காலை...
மரத்தில் தெரிந்த 'மனிதன்' பேய் அல்ல என்பது எனக்குத் தெரியும்! ஆனால் உள்ளூர் மக்களுக்கு அதைப் புரிய வைப்பது சிக்கலான வேலை!
என்னைக் கொஞ்சம் மேலே தூக்கி விடு -நேற்று இரவு நான் மரக்கட்டையை வீசிய இடத்தைத் திரும்பப் பார்க்க வேண்டும்!
வேதாள மர்மத்தைக் கண்டு பிடித்து விட்டேன்! மேலே ஏறி வந்து உன் கத்தியைக் கொஞ்சம் கொடு!
கத்தியைக் கொண்டு பேயைக் கொல்ல முடியாது என்பது கூட இந்த மனுஷனுக்குத் தெரியாதா?
யெஸ், சார்!
இதைப்பார்! மரத்திலும் அதன் கிளைகளிலும் காளான்கள் வளர்ந்துள்ளது!
ஒரு வேளை பேய்களுக்கு காளான்கள் ரொம்பப் பிடிக்கும் போலும்!
போடா முட்டாள்!
இரவில் நாம் பார்த்த வேதாளமே இந்தக் காளான்களாகத் தானிருக்கும்!
எ-என்ன சொல்கிறீர்கள்?
இது நிலா வெளிச்சத்தில் பளபளவென்று மின்னக் கூடியது!


நானும் அப்படித்தான் நினைத்தேன்! இந்தப் பேய்
பிசா செல்லாம் போலின்று எனக்கு முன்பே தெரியும்!
இதற்கிடையில் ஜுவல் இன்செல் தீவில்...
பைஞக்குலரை என்னிடம் கொடு, பெண்ணே!
ஆறு சிறு படகுகளில் தன் தீவைச் சுற்றிய கடற்பாறைகளில் சிப்பி திருடும் சட்ட விரோதிகள் சுரண்டுவதை புருஞே கண்டான்...
கொள்ளை யர்கள்!
சக்தி வாய்ந்த படகு ஒன்றில் புறப்பட்டான் புருஞே!
இந்தப் பாறையின் பின்னால் பதுங்கி யிருந்தால் ஒரு படகையாவது வளைத்துப் பிடித்து விடலாம்! சத்த மில்லாமல் ஒரே அமுக்கு!


எந்திரப் படகை இயக்கியவுடன்...
டுர்ர்ர்
இப்ப பார்ப்போம்!
திருட வந்தவர்கள் தங்கள் தாய்க் கப்பலை நோக்கி ஓட்டமெடுத்த னர்...
ஓடி விடுவோம்!
நம்மைக் கண்டு பிடித்து விட்டனர்!
ஆனால் தண்ணீரில் குதித்த ஒருவனைத் தவிர...
நீ தப்ப முடியாது நாயே!
எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் என் தீவிலேயே உங்கள் வேலையைக் காட்டுவீர்கள்?
!?!


புருஞே ஒருவனை மடக்கிப் பிடித்த அதே சமயம் மற்றவர்கள் தாய்க் கப்பலை நோக்கி ஓடிவிட்டனர்.
ஐயோ!
இவ்வளவு வேகம் கூடாது திருட்டுப் பயலே!
ஜூவல் இன்செல் தீவில் திருடர்களுக்கு என்ன கதி என்று அறிய மேலே வா படுவா!
க்ராக்
உன்னுடைய தோஸ்த்துகள் உன்னை 'அம்போ'வென விட்டுப் பறந்து விட்டனர்...! என்னுடைய தீவு எல்லைக் குள் அடியெடுத்து வைக்க நினைத்த இந்த நாளை நீ அவ்வளவு சீக்கிரத்தில் மறக்க முடியாது அப்பனே!


ரவி, நாய்களைக் கட்டிப் போடும் சங்கிலியைக் கொண்டு வா!
யெஸ், சார்!
!?!
நீங்கள் செய்வது ரொம்பக் கொடூரம்! படகில்லாமல் தீவிலிருந்து தப்பிக்க முடியாது! அப்படியிருக்க மிருகத்தனமாய் இவனைக் கட்டிப்போட அவசிய மில்லையே! சட்ட விரோதமாக இவனைத் தண்டிக்க நினைக்காதீர்கள் புரூனே!
அநாவசியமாக இந்த விஷயத்தில் மூக்கை நுழைக்காதே பெண்ணே!
இந்தத் தீவில் நான் வைத்தது தான் சட்டம் என்பதை விரைவில் தெரிந்து கொள்வாய்!!!
!?!
மடேர்!
ஐயோ!


சார்! ஒரு படகு வந்து கொண்டிருக்கிறது. அதில் ரோந்துப் பிரிவு அதிகாரி பீட்டர் பாலண்டைன் வந்து கொண்டிருக்கிறார், சார்!
நாசமாய் போக! சரி சரி - இந்த சிப்பித் திருடன் பற்றி அவனிடம் நீ ஏதாவது உளறினால் தோலை உரித்துவிடுவேன் தெரிகிறதா?
இங்கு என்ன வேலை உனக்கு?
போலியோ தீவிலிருந்து வியாதி பரவும் அபாயம் விலகி விட்டது! டாக்டர் வின்னி அங்கேயே தங்கி இருக்கிறார். சிப்பித் திருடர்கள் யாராவது இப்பகுதியில் அத்துமீறி நுழைந்தார்களா என அறியவே இங்கு வந்தேன்!
நீ வந்த வழியிலேயே திரும்பிப் போகலாம்! இங்கே கடற் கொள்ளையன் யாருமில்லை!
எங்களுடன் சாப்பிட்டு விட்டுப் போனால் நாங்கள் மகிழ்ச்சி அடைவோம், பீட்டர்!
இவள் மூஞ்சி வீங்கி இருப்பதைப் பார்த்தால்- இவளுக்கும் புரூனோவுக்கும் இடையே உள்ள உறவு முறிந்து விட்டது என்பது புரிகிறது! அது மட்டு மின்றி இங்கு ஏதோ விவகாரம் நடக்கிறது. இது பற்றித் துப்புத் துலக்க வேண்டும்!
தேங்க் யூ ஜூடி. அதற்கு முன் கதவில் போய் எப்படி மோதினாய் என்பதைச் சொல்கிறாயா?


உங்களுடன் டின்னர் சாப்பிடுவதற்கு தங்குகிறேன் ஜூடி! இன்று இரவு என் உதவியாளன் உன்கெனுக்கு விடுப்புக் கொடுத்தால் ரொம்ப சந்தோஷப் படுவான்!
கிராமத்திற்குப் போய் அங்குள்ள வேலையாட்களிடம் - பேச்சுக் கொடு. நாம் இல்லாத போது இங்கு நடந்தது என்ன என்பதைக் கண்டுபிடி!
யெஸ், சார்!
போலியோ வியாதி பரவிய பகுதி எப்படி இருக்கிறது பீட்டர்?
ரொம்ப மோசம் தான்! ஆனால் கடந்த ஒரு மாத காலமாகவே புதிதாக போலியோவினால் யாரும் பாதிக்கப்படவில்லை! அதனால் அபாயம் நீங்கி விட்டதென வின்னி அபிப்ராயப்படுகிறார்!
டின்னர் முடிந்தது -
சார் உங்களிடம் கொஞ்சம் தனியாகப் பேசலாமா?
எக்ஸ்கியூஸ் மி. கிராமத்தில் ஏதாவது பிரச்சனையாக இருக்கலாம்!



ரைட், நீ என்ன கண்டறிந்தாய்?
புரூனோ அத்து மீறி நுழைந்த ஒரு சிப்பித் திருடனைப் பிடித்து வைத்துள்ளான்!
?
அவன் எங்கு இருக்கிறான்?
வீட்டினுள்ளே கட்டிலுடன் சங்கிலி போட்டு கட்டப்பட்டுக் கிடக்கிறான்!
புரூனோ - அத்துமீறி இங்கு வந்த கடற்கொள்ளையனைப் பிடித்து நீ சங்கிலி போட்டுக் கட்டி வைத்துள்ளதாக என் உதவியாளன் சொல்கிறான்!
அதெற்கென்னவாம்? என் தீவில் திருடிய ராஸ்கலை என்ன செய்ய வேண்டுமோ, அதை நானே செய்து கொள்வேன்!
அவனைக் கண்டு பிடித்து விடுதலை செய் உடனே!
யெஸ், சார்!
அப்பாவிப் பெண்ணை அறைவது - ஒரு மனுஷனை சங்கிலி போட்டுக் கட்டி வைப்பது... சே.. சே..! மனுஷனா நீ?
நிறுத்து!


இருவரும் வெளியே போங்கள்! இந்த வீட்டின் அருகில் இனி காலடி வைத்தால் இந்தப் பெண்ணையும், கடற் கொள்ளையனையும் நானே சுட்டுக் கொன்று விடுவேன்!
தயவு செய்து போய் விடுங்கள் பீட்டர். சொல் வதைச் செய்யக் கூடிய மிருகம் இவன்!
இவளைத் திரும்பவும் கொடுமைப் படுத்தினால் உன்னை சும்மா விட மாட்டேன்!
என்னிடம் ஒரு திட்டம் இருக்கு சார்...
சொல்லு! அங்கே வீட்டினுள் உள்ள இருவரது விதியும் நம் கையில் தான் இருக்கின்றன!
ரொம்ப சுலபம்! வீட்டின் சமையல் காரன் ரவியைப் பார்த்து புருஞேவை நன்றாகக் குடிக்கும்படி செய்து விடுகிறேன்... அதன்பிறகு பயலை லேசாக அமுக்கி விடலாம்!
அடாவடியாக வீட்டினுள் நுழைய முயன்றால்... புருஞே இருவரையும் சொன்னபடி தீர்த்துக் கட்டி விடுவான்...! ஆனால், குடிபோதையில் கிடக்கும் போது நாம் லேசாக உள்ளே நுழைந்து விடலாம்! நல்ல திட்டம் தான்!
ஓ.கே.! ரவியுடன் தொடர்பு கொண்டு புருஞேவுக்கு எக்கசக்கமாய் 'ரம்' ஊற்றிக் கொடுக்கும்படி சொல்! உஷாராக செயல்படு!


நாம் கடற்கரை நோக்கித் திரும்பிச் செல்வதை அவன் கண்ணில் படும்படி செய் வோம்! கமான் - இப்போதே இருட்டத் துவங்கி விட்டது!
சற்றைக் கெல்லாம் உன்கென் பறவையைப் போல் ஒலி எழுப்பி ரவியை வரவழைத்தான். அவனிடம் விஷ யத்தை விளக்கிச் சொன்னான்.
உஷ்! மெல்லப் பேசு. ரோந்து அதிகாரி பீட்டர் உன்னிடம் ஒரு விஷயம் சொல்லி வரச் சொன்னார். புருனோவை இரவில் நன்றாகக் குடிக்கும்படி செய்ய வேண்டுமாம்! அவனுக்கு ஏராளமாக 'ரம்' ஊற்றிக் கொடுக்கச் சொன்னார்!
அதில் கஷ்டமே யில்லை! அவர் தான் ஒவ்வொரு இரவிலும் பயங்கரமாய் குடிப்பாரே!
வீட்டினுள் -
என்னுடன் வா! அந்த முட்டாள் பீட்டர் ஒரு வேளை திரும்பி வரலாம்! அதற்கு முன் உன்னை ஒரு அறையில் போட்டு பூட்டி வைக்கிறேன்!
பிரச்சனையிலிருந்து உன்னால் தப்பி விட முடியாது! இந்நேரம் பீட்டர் கடற்படையினிடம் தொடர்பு கொண்டிருப்பார்!
கடற் படையினரா?
யெஸ். இந்தத் தீவின் பக்கத்தில் கடல் ரோந்துக் கப்பல் ஒன்று நங்கூரமிட்டிருக் கிறது!
அப்படியானால் எந்த ஒரு தடயமும் இல்லாமல் செய்து விடுவது தான் நல்லது!!


கடலிலோ -
ஜுவல் இன் செல் தீவில் நானும் தங்கி இருந்திருக்க வேண்டும்! புருனோவை பீட்டர் செம்மையாக உதைக்கும் காட்சியைப் பார்த்திருக்க வாய்ப்புக் கிடைத்திருக்கும்!
ரோந்துக் கப்பல் டாக்டர் வின்னியை அழைத்து வா போலியோ தீவுக்குப் போய்ச் சேர்ந்தது!
இங்குள்ள நோயாளிகளில் 6 பேரை மேற்கொண்டு சிகிச்சைக்காக ராவூல் கொண்டு செல்ல வேண்டும், டக்!
ஓ.கே. டாக்டர்! அவர்களை சீக்கிரம் கப்பலுக்கு கொண்டு வாருங்கள்! வாண வேடிக்கை நடக்க விருக்கும் ஜுவல் இன்செல் தீவுக்குத் திரும்பிப் போக வேண்டும்!
திடீரென்று எஞ்சின் அறையிலிருந்து பயங்கர சப்தம் கேட்டது...
என்ன ஆச்சு?
பயங்கரமான சப்தம்! ஏதோ பிரச்சனை!
மோசமான தகவலா?
அப்படித்தான் நினைக்கிறேன்! எஞ்சினைக் குளிர வைக்கும் இணைப்புக் குழாய் உடைந்து விட்டது. என்னிடம் வேறு குழாய் கை வசம் இல்லை!


இனி என்ன செய்வது?
உதவிக்கு ரேடியோ மூலம் யாரையாவது தொடர்பு கொள்ள முடிகிறதா என்று பார்க்க வேண்டும்!
அதில் ஏதும் சிக்கல் கிடையாதே!
சிக்கல்தான்! கப்பல்கள் நடமாடும் பகுதியைவிட்டு வெகுவாக விலகி இருக்கிறோம்! அருகாமையில் வேறு கப்பல்கள் இருப்பதும் கஷ்டம்! ஏதாவது பிரார்த்தனை தெரியுமென்றால் அதைச் சொல்லிப் பார்க்க வேண்டியதுதான்!
இதற்கிடையில் ஜுவல் இன்செல் தீவில்...
உன்னை நிலவறையில் தள்ளி அடைத்து விட்ட பின், அந்தக் கடற் கொள்ளையனையும் தடம் தெரியாமல் செய்து விடப் போகிறேன்! ஹா! ஹா! கடற்படையினரால் எந்த ஒரு தடயத்தையும் கண்டு பிடிக்க முடியாது!
கடற் கொள்ளையனை நீ பிடித்து வந்தாய் என்பதற்கு ஏராளமான சாட்சிகள் உள்ளனர்!
என்னிடமிருந்து தப்பி ஓடி விட்டான் என்பேன்! தீவிலிருந்து தப்ப முயன்ற போது கடலில் மூழ்கி செத்திருப்பான் என்று சொல்வேன்!
உன்னைப் பிறகு கவனித்துக் கொள்கிறேன்!


அதே சமயம் புறப்பட்டுப் போவதாய் 'பாவ்லா' காட்டி விட்டுத் திரும்பி வந்தார் பீட்டர்!
ரவியுடன் தொடர்பு கொள்ள முடிந்ததா?
யெஸ்! புருஞே்வுக்கு எக்கச் சக்கமாய் 'ரம்' ஏற்றி விடுவான்! ஜூடியை நிலவறையில் வைத்துப் பூட்டியுள்ளனாம்!
புருஞே வராண்டாவுக்குத் திரும்பி வந்து தன் துப்பாக்கியை எடுத்துக் கொண்டான்..
குடிக்க எனக்கு மது கொண்டு வா. ம்ம்ம் ஜல்தி!
யெஸ் சார்!
புருஞே மாறி மாறி மதுவை ஊற்றிக் குடிப்பதை பீட்டரும் மற்றவர்களும் மறைந்திருந்து பார்த்தனர்.
அங்கே பாருங்கள்!
குடிபோதையில் அந்த சிப்பித் திருடனை சங்கிலி போட்டு இழுத்து வருகிறான்!
கமான்! இது தான் நமக்கு நல்ல சந்தர்ப்பம்!


கொள்ளையன் தடுமாறி! விழுந்ததில் மேஜை மீது இருந்த விளக்கு கீழே விழுந்து தீப்பற்றியது...:
நிறுத்து!
என்னை விட்டு நகர்ந்து போ முட்டாளே...
தன் மீது பாய்ந்த ரவியை புருனோ தூக்கி எறிந்தான்.
ஐயோ!
என் விவகாரத் தில் தலையிடவா செய்கிறாய் பன்றிப் பயலே...
டமீல்!
தீப்பற்றிய வீட்டினுள் பீட்டர், பல்வால் மற்றும் உன்கெனும் வேகமாய் நுழைந்தனர்...
புருனோ மீது பாய்ந்து கீழே வீழ்த்தினார் பீட்டர்...
இங்கே கிடப் பவர்களை வெளியே கொண்டு போங்கள்! இந்த இடம் முழுவதும் விரைவில் தீக்கிரையாகி விடும்!


மடேர்!
சுண்டைக்காய் பையன் நீ - பீட்டர்!
ஜாக்கிரதை சார்!
தேங்க்ஸ்! சீக்கிரம் நான் ஜூடியை வெளியேற்ற வேண்டும்!
உப்ப்!
தும்!


அவளுக்கு ஏதாவது ஆகியிருந்தால்... உன்னை நார் நாராய் கிழித்து விடுவேன்!
கும்!
இந்த வீடு தீப் பிடித்து தரை மட்டமாகும் முன்பு உன்னால் அவளை வெளியே கொண்டு செல்ல முடியாது.
அவன் சொல்வதும் உண்மைதான்!
சத்!
ஐயோ!
அவளை மட்டும் மீட்க முடியா விட்டால் உன்னை என் கையாலேயே கொன்று விடு வேன் மறந்து விடாதே!


தேங்க் காட்! அறையின் சாவி இன்னும் கதவிலேயே உள்ளது!
உனக்கு ஒன்று மில்லையே?
யெஸ்! யெஸ்! ஆனால் நான் ஹோராவைப் பற்றியே கவலைப் பட்டேன்!
யாரவன் ஹோரா?
அவன் தான் அந்த சிப்பித் திருடன்!
அவன் பத்திரமாக உள்ளான்! அவனைப் பற்றிக் கவலைப்படாதே. நாம் இங்கிருந்து விரைவில்... வெளியேற வேண்டும்!
வெளியில்
நோ, பால்வால்! இப்ப ரொம்ப தாமதமாகி விட்டது!
ஓ! பீட்டர்! நம் மால் ஒருபோதும் வெளியேற முடியாது!
அங்கு கிடக்கும் இரண்டு சாக்கு களை எடுத்து உன் தலை முழுவதையும் நன்றாகப் போர்த்திக் கொள்!
இந்த ஹால் இன்னும் தீப் பிடிக்கவில்லை!


அவசரப்பட்டுச் சொல்லி விட்டேன்!
ஓ!
சீக்கிரம்! மீண்டும் கீழ் தளத்திற்குத் திரும்பி விடுவோம்!
அதே சமயம் கடலிலோ - ஜூவல் இன் செல்லில் நடக்கும் விபரீதங்களை அறியாதிருந்தார் கேப்டன் டக்...
'பான்' சிக்னல் கொடுத்துப் பார்க்கப் போகிறேன்!
அது என்ன 'பான்' சிக்னல் சமாச்சாரம்?
'பான்' சிக்னல் என்றால் உயிருக்கு ஆபத்தில்லை -ஆனால் இக் கட்டில் சிக்கி யிருக்கிறோம் என்று பொருள்!
கப்பல் எங்காவது கடற்பாறை மீது மோதித் தொலைந்தால் உயிருக்கும் ஆபத்துதான்!
பான்! பான்! பான்! அவசர உதவி தேவை! உதவுங்கள்! உதவுங்கள்! பான்! பான்! பான்! ரோந்துக் கப்பல் 'அதிஞு'விலிருந்து கூப்படுகிறோம்... இது...
இது என்னமோ பிரயோஜனப் படுமென்று தோன்ற வில்லை!


அட ஆண்டவா! நம்முடைய அவசரச் செய்தி யாருக்கோ கிடைத்து விட்டது!
...ஹலோ அதிரூ! டாரவல்லி கப்பலில் இருந்து பேசு கிறோம். தெற்கே 04 டிகிரியில் இருக்கிறோம். மாலை 4 மணி சுமாருக்கு உங்களிடம் வந்து விடுவோம்!
அடி சக்கை! நமக்கு இப்போது பதிலளித்தது கடற்படைக் கப்பல்! கப்பலின் பெயர்H.M.S. டார்ரவல்லி!
இதற்கிடையில் தீவில்...
அருகில் வந்து தங்களை இழுத்துச் செல்ல தயாரான கடற்படைக் கப்பல் டாரவல் லியை 'அதிரூ' ரோந்துப் படகில் இருந்த மாலுமிகளும், பயணிகளும் வேடிக்கை பார்த்தனர்.
J261


'அதிஞ' படகில் இருக்கும் டக்கரான தீவுப் பெண்களைப் பாரேன்!
வாவ்!
ஆண்டவா! இத்தனை காலமாய் அரசாங்கத்திற்கு வரி கட்டியதற்கு இப்படியாவது பலன் கிடைத்துள்ளதே!
ஹேய், மேலே வா பிரதர்!
ரோங்துப் படகை ஜுவல் இன் செல் தீவு வரை இழுத்து வர கடற்படை கப்பல் காப்டன் சம்மதித்தார்.
காயப்போட்டப் பட்டிருக்கும் தேங்காய் மட்டைகள் தீப்பிடித்து எரிவது போல் அல்லவா தெரிகிறது!
நோ! மலைப்பகுதியில் தீப்பிடித்துள்ளதாகத் தெரிகிறது. தேங்காய் மட்டைகளைக் காயப் போடும் இடம் சமவெளியில் அல்லவா இருக்கிறது!
அங்கு ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது! பீட்டர் எங்கே?


உதவுங்கள்! இங்கு பயங்கர மான பிரச்சனை ஏற்பட்டுள்ளது! பீட்டர் சாரும் ஜூடியும் கொல்லப் பட்டுள்ளனர்!
!?!
!?!
கடற்படை கப்பல் காப்டனிடம் தகவல் தெரி விக்கப்பட்டது!
நிலைமை எப்படி யுள்ளது என்பதைக் கண்டறிய உங்களுடன் ஒரு குழுவை அனுப்பு கிறேன்!
அந்தப் பன்றிப் பயல் புருனோ தான் காரண மென்றால் நீங்கள் அனுப்பும் குழுவினரை ஆயுதங்களுடன் அனுப்புங்கள்! அவன் ரொம்ப ஆபத்தானவன்!
உண்மையில் என்ன நடந்தது?
மிஸ் ஜூடியைக் காப்பாற்ற "சார்" வீட்டினுள் சென்றார். அப்போது வீடு தீப்பற்றிக் கொண்டது. அதன் பிறகு நாங்கள் இருவரையுமே பார்க்கவில்லை!


புரூஞே அவளை நிலவறையில் போட்டு பூட்டி வைத்திருந்தான். ரவியையும் சுட்டு விட்டான்!
புரூஞே இப் போது எங்கே இருக்கிறான்?
பால்வால் அவனை ஒரு பனை மரத்தோடு கட்டி வைத் துள்ளான்!
இந்தக் கதவு கருகி உள்ளது சார்!
வெயிட்! உள்ளே யிருந்து ஏதோ சப்தம் கேட்டது.
எரிந்து போன மரத்தளத்திற்கு கீழே காங்கிரீட் தரை உள்ளதே?! ஹ்ம்ம்ம்!
கதவை உடைத்துத் திறங்கள்!
அவர்களை சீக்கிரம் மேலே கொண்டு வாருங்கள்! யாரையாவது ஒருவரைக் காப்பாற்ற வாய்ப் பிருக்கலாம்!
இருவருமே சுவா சிக்கின்றனர், சார்!




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக திகில் காமிக்ஸை வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த.பெ, எண்: 374. சிவகாசி - 626 123. ☏போன்: 21159. வெளியீடு எண்: 103
அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.

# ஸ்பாட்-லைட்!

## வாசகர்கள் பக்கம்

### சில்லரை போய் நகை வந்தது!

கதை, படம்:
**தி.ரமேஷ்,**
பெருங்களத்தூர்.





அதே நேரம் சில்லரைப்பையை எடுத்து ஓடிய குரங்கன்
எல்லாம் வைர நகை!
ஆமா!
பய விடாம துரத்தி வரானே!!!
சில்லரைப்பையை தண்ணில போட்டா பயல் என்னைத் துரத்த மாட்டான்!
ஐய!
உடனே மூவரும் நகைக்கு சொந்தக்காரன் வருவதை அறியாமல் சில்லரைப்பையை எடுக்க நீரில் குதித்தனர்!
என்னது? என் நகை எல்லாம் இங்க... ஓ! இப்ப புரியுது!
நல்லவேளை! நகையை இழக்க இருந்தேன்!!
முற்றும்.



# வாசகர் கடிதம்



- S. மணி, ஆத்தூர் - 636 141.

  பெயருக்கேற்றார் போல ''ஒரு திகில் பயணம்'' மிகவும் விறுவிறுப்பாகவும், திகிலாகவும் இருந்தது.



- கிருபாகர் ஆப்ரஹாம், சென்னை - 24.

  கேப்டன் பிரின்ஸ் சாகஸம் அற்புதம். கடைசிவரை அவர்கள் தேடிச் செல்லும் பொருள் என்ன என்று சொல்லாமலேயே கதையைக் கொண்டு போன விதம் சூப்பர்! இரத்தப் படலம் V லயனில் வரயிருப்பது குறித்து மகிழ்ச்சி!

- பாரதி நந்தீஸ்வரன், குமாரபாளையம்.

  கதைகளின் 'த்ரில்'லை 'ஓவர் டேக்' செய்து வரும் ஹாட்-லைன்... தகிக்க வைக்கும் XIII ன் V & VI பாக அட்டை! தேனில் விழுந்த வண்டாய் நான்!



- S. மணிசந்திரன், வளவிசெட்டிபட்டி.

  'ஒரு திகில் பயணம்' அட்டைப்படம் ரொம்ப சூப்பர்!

- பா. துரை பிரசன்னா, சிவகாசி.

  'திகில் பயணம்'' அட்டைப் படத்திலிருந்த மெருகு உள்ளே கதையில் - சித்திரங்களில் இல்லை!

- V. செந்தில்குமார், அத்திப்புலியூர்.

  இரத்தப்படலம் V உடனே வெளியிடுங்கள்!

# கதை சொல்லும் படங்கள் 2

சித்திரங்கள் மூலம் கதை சொல்லும் பாணியை ஒரு art form க்குக் கொண்டு வந்த பெருமை வால்ட் டிஸ்னியைச் சேரும்! அயரா உழைப்பும் - அதீத கற்பனை வளமும் கொண்ட அந்த அமெரிக்க இளைஞரை சர்வ தேசப் புகழடையச் செய்த முதல் கதாபாத்திரம் - ''**மிக்கி மவுஸ்**'' தான்!

உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களைப் பெற்றுள்ள இந்த கார்டூன் சுண்டெலி உருவானதன் பின்னால் ஒரு சுவையான கதையுண்டு! வால்ட் டிஸ்னி தனது டிராயிங் மேஜையில் அமர்ந்து வேலை செய்து கொண்டிருக்கும்போது **ஒரு சுண்டெலி தைரியமாக** வந்து உலாற்றுமாம்! அதுவரை 'ஒஸ்வால்டு'' எனப் பெயரிடப்பட்டதொரு முயலைப் பற்றிய கதைகளை எழுதி வந்த வால்ட் டிஸ்னி - சுண்டெலியை மையமாகக் கொண்ட கதையை உருவாக்கத் தீர்மானித்தாராம்!




முதலில் **மார்டைமர்** எனப் பெயரிடப்பட்டு - பின்னர் வால்ட் டிஸ்னியின் மனைவியால் ''**மிக்கி மவுஸ்**'' எனப் பெயரிடப்பட்டது! ஹாலிவுட்டில் கார்டூன் திரைப்படமாக வந்த மிக்கியின் சாகஸங்கள் முதன் முதலில் காமிக்ஸ் தொடராக வெளிவந்தது ஜனவரி 1930ல்! வெகு விரைவில் உலகின் அனைத்து முக்கிய மொழிகளிலும் மிக்கி சாகஸம் செய்ய ஆரம்பித்தது! (ஏனோ தெரியவில்லை - நம் நாட்டில் மிக்கி மவுஸ் கதைகள் அவ்வளவாக 'க்ளிக்' ஆகவில்லை)

*S.விஜயன்*

பிரபலமான இன்னொரு காமிக்ஸ் தொடரும் 1930ல் துவங்கியது! அமெரிக்க சிரிப்பு நடிகர் ஜோடியான லாரலும், ஹார்டியும் தான் அந்தத்

தொடரின் நாயகர்கள்! "Film Fun" என்ற இங்கிலாந்து வாரப் பத்திரிக்கையில் 1930ம் ஆண்டு நவம்பர் 8ம் தேதி தொடங்கிய இவர்களது சாகஸங்கள் வாசகர்களின் அமோக ஆதரவுடன் 15 / 11 / 1957 வரைத் தொடர்ந்தது! நிஜ வாழ்க்கையில் கூட அத்தனை காலம் இணைந்து நடிக்காத அந்த காமெடி ஜோடி - காமிக்ஸ் உலகில் 27 வருடங்கள் சேர்ந்திருந்து சாதனை படைத்தது!






சாகஸக் கதாநாயகர்கள் வரிசையில் 1934-ல் லீ ஃபாக்கால் உருவாக்கப்பட்ட "மாயாஜால மன்னன் மாண்ட்ரேக்" உலகமெங்கும் ரசிகர்களைப் பெற்றுள்ளார். அறுபது ஆண்டுகளுக்குப் பின்னும் கூட தொடர்ந்து சாகஸம் செய்து வரும் சில ஹீரோக்களில் இவரும் ஒருவர்.

1938.- காமிக்ஸ் உலகிற்கு ஒரு மைல்கல் ஆண்டு! "ஆக்ஷன் காமிக்ஸ்" என்ற பெயரில் அமெரிக்காவில் ஒரு புதிய இதழ் உதயமானது. அதில் "சூப்பர் மேன்" என்று பெயரிடப்பட்டதொரு புதிய ஹீரோவின் சாகஸம் பிரதானமாக வந்திருந்தது. எண்ணி நான்காவது இதழ் வெளிவருவதற்குள் ராட்சஸத்தனமான டிமாண்ட் உருவாகியிருந்தது! கடைகளுக்கு காமிக்ஸ் வந்த நாளிலேயே விற்றுப் போய் விட்டது! பதிப்பாளருக்கு ஒரே ஆச்சரியம்; தனது மற்ற காமிக்ஸ்களெல்லாம் சுமாராக விற்று வரும்போது - ஆக்ஷன் காமிக்ஸிற்கு மட்டும் ஏன் இந்த திடீர் மவுசு என்று! வாசக - விற்பனையாளர்களிடையே ஒரு 'சர்வே' எடுத்தபோது அனைவருக்குமே "சூப்பர் மேன்" பயங்கரமாய் பிடித்துப் போயிருப்பது புலப்பட்டது! அன்று முதல் எல்லா "ஆக்ஷன் காமிக்ஸ்" இதழ்களின் அட்டைப் படத்திலும் சூப்பர்மேன் தான் இடம்பெற வேண்டுமென பதிப்பாளர் ஸ்டிரிக்டாக உத்தரவிட்டார்! காமிக்ஸ் உலகிற்கும் - அசகாய சக்தி படைத்த சூப்பர் ஹீரோக்களுக்குமிடையிலான romance துவங்கியது அன்றுதான்!

அத்தனை காலமாக நியூஸ் பேப்பர்களில் இடத்தை நிரப்புவதற்காகவே உருவாக்கப்பட்டு வந்த காமிக்ஸிற்கு தனிப்பட்ட ஒரு மரியாதையை சூப்பர் மேன் உருவாக்கிக் கொடுத்தார்! ''சூப்பர் மேன்'' உருவானது எப்படி என்று தெரியுமா?

அமெரிக்காவின் ஒஹையோ நகரில் இரு காலேஜ் நண்பர்கள் தனிப் பட்ட முறையில் ஒரு காமிக்ஸை உருவாக்கும் வேகத்தில் கூட்டணி சேர்ந் தனர். ஜெர்ரி சீகல் கதை எழுத, ஜோசப் ஷஸ்டர் படம் வரைந்தார். எதிர் காலத்தில் அசாத்திய சக்தி படைத்த மனிதர்கள் உருவானால் உலகம் எப்படி யிருக்கும் என்ற கண்ணோட்டத்தில் ''சூப்பர்மேன்'' கேரக்டரை உருவாக் கினர். முதலில் நியூஸ் பேப்பர்களில் தொடராக சூப்பர்மேனை அறிமுகப் படுத்த எண்ணி கதையை தயாரித்தனர். ஆனால் அத்தனை எடிட்டர்களும் சூப்பர்மேனை நிராகரித்து விட்டனர். காரணம் - ''பயங்கர பூச்சுற்றலாக உள்ளது'' என்று! அயராமல் அடுத்த முயற்சியாக சூப்பர்மேனை காமிக்ஸ் பதிப்பாளரிடம் அனுப்பி வைத்தனர்.

தபாலில் வந்த பார்சலை - ஷெல்டன் என்றதொரு ஆர்டிஸ்ட் பிரித்துப் பார்த்தார். காதில் பூச்சுற்றல் ரகக் கதைகளாக இருந்தாலும் - அதிலும் ஒரு த்ரில் இருப்பதை அவர் உணர்ந்தார். உடனே தனது முதலாளியிடம் காட்டி கதையை வாங்கி வெளியிட வேண்டுமென்று வற்புறுத்தினார். வேண்டா வெறுப்பாக சம்மதித்தார் முதலாளி! உடனே சூப்பர் மேனை வரைந்த ஜோசப் ஷஸ்டரைக் கொண்டே முதல் இதழின் அட்டைப் படத்தையும் வரைந்தனர். பதிப்பாளருக்கு அட்டைப்பட டிசைன் அபத்த மாகப் பட்டாலும் - எப்படியோ அச்சாகி ''ஆக்ஷன் காமிக்ஸ்'' வெளி வந்தது. The rest is history. (காமிக்ஸ் படைப்பாளர்களாக உருவாக நினைக்கும் நண்பர்களே தோல்வியைக் கண்டு தளராதீர்கள்!)



முதல் இதழ் இதோ! 10 செண்ட் (3 ரூபாய்) விலைக்கு அன்று விற்ற - இந்த இதழ் தப்பித் தவறி உங்கள் தாத்தா - பாட்டி யாரிடமாவது இருந்தால் நீங்கள் இன்று லட்சாதிபதி! யெஸ் - நல்ல நிலையில் இருந்தால் 14,000 டாலர் (ரூ. 4,50,000/- சுமார்) விலை கொடுத்து வாங்க அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் காமிக்ஸ் வெறியாகள் உள்ளனர்!

இப்போது சொல்லுங்கள் - காமிக்ஸ் சிறுபிள்ளை சமாச்சாரம் தானு?

சூப்பர்மேனின் வெற்றியைத் தொடர்ந்து இன்னொரு புதிய சூப்பர் ஹீரோ தேவையென எடிட்டர் வின்செண்ட் சலிவன் உணர்ந்தார். அப்போது கார்டூன்களை வரைந்து வந்த பாப் கேன் எனும் ஓவியரை உடனே வரவழைத்து தன் எண்ணத்தைத் தெரியப்படுத்தினார். கார்டூன்கள் வரைவதிலேயே நாட்டம் கொண்டிருந்த கேன் விரைவில் மனதை மாற்றிக் கொண்டார் - சூப்பர் மேனின் படைப்பாளர்கள் வாரம் 800 டாலர் (அந்தக் காலத்தில் இது மிகப் பெரிய தொகை) சம்பாதித்துக் கொண்டிருப்பதை அறிந்தவுடன்!

பேட்மேன் உருவானது எப்படி என பாப் கேன் விவரிக்கிறார்!




"சூப்பர்மேன் பிகரை எடுத்துப் போய் அப்படியே டிரேஸ் செய்து உடுப்பை பல்வேறு விதமாக மாற்றியமைத்துப் பார்த்தேன். எனக்கு 12 வயதிருக்கும் போது படித்ததொரு புத்தகம் நினைவுக்கு வந்தது. அதில் பிரபல ஓவியர் லியனார்டோ டா வின்சி ஒரு பறக்கும் மனிதனை கற்பனையில் வரைந்திருந்தார். வௌவால் போன்ற இறக்கைகள் கொண்டிருந்தான் அந்த ஆசாமி! அதை அப்படியே தத்து எடுத்துக் கொண்டு BATMAN ஐ உருவாக்கினேன்." 1939-ம் ஆண்டு மே மாதம் BATMAN உலகிற்கு அறிமுகமானுர்! இன்று வரை சர்வதேச அரங்கில் தனக்கென ஒரு தனி இடம் பிடித்து வருகிறார் இந்த வௌவால் மனிதன்!

1940கள் முழுவதும் சூப்பர் ஹீரோக்கள் காமிக்ஸ் உலகை ஆண்டு வந்தனர். அடுத்த இதழில் அது பற்றி!

(தொடரும்)


ஜூனியர் & சீனியர்!
கதை: S.விஜயன் ☆ சித்திரம்: சிகாமணி
சே... எப்போ பார்த்தாலும் தூக்கம் -தானா? உங்களுக்கெல்லாம் எதையாவது சாதிக்கணும்கிற வேகமே கிடையாதா?
கொர்ர்ர்ர்
இது வரைக்கும் ஏதாச்சும் உருப்படியா செய்திருக்- -கியா?
கொர்ர்ர்ர்ர்..
எல்லாரும் உன்னை மாதிரியே தூங்கினா உலகம் என்ன ஆகிறது?
?
கொர்ர்ர்ர்..
கொர்ர்ர்...
கொர்ர்ர்ர்ர்..


விரைவில் வருகிறது!
மாடஸ்டி பிளைஸி தோன்றும்
மரண ஒப்பந்தம்!
லயன் காமிக்ஸ்
ரூ. 4/-


விரைவில் வருகிறது!
லயன் காமிக்ஸ்
“கம்ப்யூட்டர் கொலைகள்!”
ரிப் கிர்பி சாகஸம்!
ரூ. 3.50


ரிப்போர்டர் ஜான
நாலு கால் நண்பன்!
நேரம் தவறாத தன்னுடைய வழக்கப்படி அன்றைய தினமும் ஜானி வீட்டை விட்டு வெளியே வந்தார். அப்போது...
!
சே! அப்பாவி நாய் அடிபட்டு சாகப் போகிறது!
யாரும் வண்டியை நிறுத்தப் போவதில்லை! எல்லாருமே மனித உருவில் உள்ள மிஷின்கள் தான்!
சீக்கிரம்!...


நிறுத்துங்கள்!
முட்டாள
கிரீச்!
பார்த்தாயா பையா? கொஞ்சம் இரக்க குணம் இருந்தால் கிடைக்கும் பரிசு இதுதான் என்பதைப் புரிந்து கொள்!
ஒரு ரௌடிக் கும்பலைக் கூட என்னால் எதிர்த்துவிட முடிகிறது- ஆனால் இந்த மனித எந்திரங்களை சமாளிக்க முடியவில்லை. அதற்காகப் பயப்படாதே! நாம் நழுவி விடுவோம்!


டாம்! ஹ்ம்ம்ம்! அழகான பெயர் தான்!
அடடே! இந்த லாக்கெட் பின்னால் அட்ரஸ் கூட இருக்கே? 207, சார்ம்ஸ் அவென்யூ... இங்கிருந்து ரொம்ப தூரத்தில் இல்லை..! நல்ல காலம் - பத்திரிக்கையில் விளம்பரம் போட்டு இதன் எஜமானைக் கண்டு பிடிக்கும் வேலை மிச்சமாகி விட்டது! நடந்து போய் இந்த முக வரியில் ''துரையை'' ஒப்படைத்து விட வேண்டியதுதான்! கமான்!
டாம், போகலாம் -வா!
கமான், டாம்!
இடத்தை விட்டு நகர மாட்டேன்கிறதே? என்ன காரணமாக இருக்கும்?
ஒஹோ! இப்போது புரிகிறது விபரம்! ''சாருக்கு'' நான் பிரெஞ்சில் பேசியது புரியவில்லையாக்கும்! இங்கிலீஷ்காரர்கள் வீட்டில் வளர்ந்த நாய் போலுள்ளது!
ஆல் ரைட், டாம்! நான் இங்கிலீ ஷிலேயே பேசுகிறேன்!



வீட்டை விட்டு வெளியேறி ஊருக்குள் எதற்காக வந்தாய்?
207, சார்ம்ஸ் அவென்யூவில் பழங்காலக் கட்டிடம் ஒன்று இருந்தது...
இதோ - உன் வீட்டுக்கு வந்து விட்டோம் டாம்!
உன்னைப் பார்த்த உடன் சந்தோஷப் படுவார்கள்!
அந்த வீட்டின் கதவு மெதுவாகத் திறந்தது...
உள்ளே வா ஜானி! கையை மேலே தூக்கு! ம்ம்ம்.. சீக்கிரம். இல்லையேல் சுட்டு விடுவேன்!
!
தப்பிக்க எதுவும் செய்ய முயற்சிக் காதே!.. முன்னால் போ...
போச்சுடா..
ஓ!


இனி இங்கிருந்து சீக்கிரமாகத் தப்பி ஓடி விட வேண்டும்!
ஹாண்ட்ஸ் அப்! சேட்டை பண்ண நினைத்தால் நீட்டி நிமிர்ந்து பிணமாகத் தான் போவாய்!
நீட்டி நிமிர வேண்டுமாக்கும்? அப்படியே செய்கிறேன்!..
ஐயோ!
ஜானி! துப்பாக் கியை கீழே போடு! அல்லது நாயை சாகடித்து விடுவேன்!



ஜானி துப்பாக்கியைக் கீழே போட்டார்...
என்னைப் பற்றி இன்னும் என்ன வெல்லாம் தெரியும்?
நீ இளகிய மனசு கொண்டவன் என்பது எனக்குத் தெரியும் ஜானி!
அதன் பிறகு -
எங்களுடைய திட்டம் பற்றி என்ன நினைக்கிறாய்? உனக்குக் கொஞ்சமும் சந்தேகம் ஏற்படா வண்ணம் எங்கள் வலையில் விழவைக்க நாயைப் பயன் படுத்தியது அருமையான ஐடியா தானே?
நீயாக வலிய வந்து எங்களிடம் சிக்கி விட்டாய் அப்பனே!
நீ வீட்டை விட்டு வெளியே வந்த அதே கணத்தில் தான் மாத்யூ நாயை ரோட்டில் விட்டான்! நாங்கள் எதிர்பார்த்தபடியே நீ அதைக் காப்பாற்றினாய்! எங்கள் தந்திரமும் பலித்து விட்டது...
நீ யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பியதால் இப்போது நீ இருக்கும் இடம் யாருக்கும் தெரியாது?
உங்களுக்கு என்ன வேண்டும்?



பணம் தானே?
சரியாகச் சொன்னாய்!
எவ்வளவு?
புத்தம் புது நோட்டுக் களாக 2 லட்சம் பிராங்க்ஸ் வேண்டும்! புரியுதா?
உனக்கு நிச்சயம் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது! என்னிடம் அவ்வளவு பணம் கிடையாது தம்பி! இவ்வளவு தொகையை எனக்காகக் கடன் தரவும் யாருமே ஒத்துக் கொள்ள மாட்டார்கள்..!
உண்மைதான்! உண்மைதான்! அது பற்றிக் கவலைப் படாதே! அதற்கும் நாங்கள் ஒரு வழி வைத்துள்ளோம்! உனக்காகப் பணம் தர உனக்குத் தெரியாமலேயே ஒரு பார்ட்னரை ரெடி பண்ணி விட்டோம்!
உன்னைப் போலவே அவரும் சரியான நேரத்தில் வந்து விடக் கூடிய வர்தான்!
ஆயுசு நூறு! இதோ வந்து விட்டார்!


உன்னை மீண்டும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி டியர்!
சேவியர் பாலர்டு! பெரிய பைனான்சியர்! ''சாத்தானின் சகோதரர்கள்'' அமைப்பின் தலைவர்! எல்லாம் உன் வேலை தானு?
தப்பி ஒரு மாதமாகிவிட்டது!... ஆனுல் இவ்வளவு சீக்கிரமாகத் தலை காட்டுவாய் என நான் நினைக்கவில்லை!
ஹா! ஹா! ''பழி வாங்கும் படலம்'' என்பது சுடச்சுட அரங்கேறினால் தான் சுவையாக இருக்கும்! ஆறப் போட்டு விடலாகாது!
நண்பர்களே - உங்களுக்கு என் பாராட்டுக்கள்! சொன்னபடி ஒப்பந்தத்தை நிறைவேற்றி விட்டீர்கள்.. நான் பார்க்கில் மறைந்திருந்து நடந்தது அனைத்தையும் நேரில் கண்டேன்! உங்கள் வேலைக்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும் தவறில்லை!
என் உயிருக்கு 2 லட்சம் விலை வைத்து என்னைப் ''பெரிய ஆளா''க்கி விட்டீர்களே!
ப்பூ! 2 லட்சம் தானே? உன்னைப் பிடிப்பதற்காக என் உயிரைக் கூட சாத்தானிடம் அடமானம் வைக்கத் தயாராக இருக்கிறேன்! ஆனுல் இந்த 2 லட்சத்தையும் நீ எனக்கு வட்டியுடன் திரும்பச் செலுத்தப் போகிறாய்!


உன்னுடைய கைங்கர்யத்தால் என்னை சிறையில் தூக்கிப் போட்டனர். என் மானம், மரியாதை அத்தனையும் போய் விட்டது! கஷ்டப்பட்டு என் "அமைப்பை" மீண்டும் உருவாக்கியிருக்கிறேன்! இனி உன்னைப் பழி வாங்காமல் விடப் போவதில்லை! நான் உனக்காக செலவழிக்கும் பணத்தை நீ ஈடு செய்யப் போகிறாய்!
அது எப்படியாம்?
ஆரம்பத்தில் இப்படித்தான்!
மடேர்
ஐயோ!
ஜானிக்கு நினைவு திரும்பிய போது, சுற்றிலும் இருளாக இருந்தது!.. பீதி எனும் பேய் அவரைக் கவ்வியது.
காரின் டிக்கிக்குள் அல்லவா கிடக்கிறேன்.. என்னை எங்கு கொண்டு செல்கிறார்கள்?
ஹ்ம்ம்ம்! என் கால்களை நீட்டப் போகிறேன்!
அட ஆண்டவனே! இங்கு நான் தனியாக இல்லை! அடடே டாம்!


அமைதியாக இருடா பயலே! எப்படியாவது இங்கிருந்து வெளியேறி விடுவோம்!
ம்ம்ம்.. டிக்கியில் இருந்து வெளியே வா!
சுகமான பிரயாணம்! ஆனால் அடுத்த தடவை இன்னும் கொஞ்சம் பெரிய டிக்கியாகப் பாருங்களேன்!
ஹ்ம்ம்ம்! என்ன செய்வது இப்போது?
இது எப்படி இருக்கு?
சற்றைக்கெல்லாம் -
அதற்குள் நரகத்திற்கு வந்து விட்டோமா?


அவனை விட்டு விடு, இல்லையேல் நெற்றியில் தோட்டா பாய்ந்து விடும்!
ஓ.கே. பாஸ்!
கதை விடாமல் என் பின்னால் வா!
எல்லாம் உன்னால்தான் என்று உன் மீது பழி போட மாட்டேன் டாம்! நீ அப்பாவி!
ஆனால் இந்த ராஸ்கல்களோ உன்னை கவனிக்கவே மாட்டேன் கிறான்கள்! உன்னையும் என்னைப் போலத்தான் நடத்துகின்றனர்!
சைலன்ஸ்! உள்ளே போ!


'சாத்தானின் சகோதரர்கள்' அமைப்பு அது!
சிறு பிள்ளை போல முகமூடி போட்டு விளையாடும் ஆசை இன்னும் தீர வில்லையா?
ஜானி! நானும் என் தோழர்களும் உன்னை சாத்தானின் தீர்ப்புக்கு சமர்ப்பிக்க முடிவு செய்துள்ளோம்!
சரியான பைத்தியக் காரக் கும்பல்!
மூன்று சோதனைகள் உனக்காகக் காத்திருக்கின்றன... அதாவது நீ முதல் இரு சோதனைகளில் வெற்றி பெற்று விட்டால் - ஹா! ஹா! ஹா!


முதலில் மேஜை மீது இருக்கும் டம்ளரை எடுத்துக் குடி! உனக்கு ரொம்பத் தாகமாயிருக்குமே! போ!
தேங்க் யூ!
இந்த டம்ளரில் ஒன்றைத் தேர்ந்தெடு.. முரண்டு பண்ணினால் இந்த இடத்திலேயே உன்னையும் நாயையும் காலில் சுடப் போகிறோம்!
வெல், வெல் - சேவியர் நீ பிடிவாதக்காரப் பிள்ளைதானப்பா!
இங்குள்ள மூன்று டம்ளர்களில் ஒன்றில் கொடூரமான விஷம் உள்ளது. மற்றொன்றில் வெறும் சர்பத் உள்ளது. மூன்றாவது டம்ளரில் அது பற்றிப் பின்னர் சொல்கிறேன்!
ஹம்ம்ம்.. யோசிப்பதற்கு இது நேரமல்ல.. நான் முழிப்பதைப் பார்த்தால் அவனுக்குக் கொண்டாட்டமாக இருக்கும்!
திடீரென்று ஜானி முடிவு செய்தார்...
என்னுடைய ஆரோக்கியத்திற்காக!
டம்ளரில் இருந்த திரவம் காலியானது...
ஆ! நான் உயிரோடு இருக்கிறேன்! எனவே இது கொடிய விஷம் அல்ல! சர்பத் இருந்த டம்ளரைத் தான் எடுத்திருக்கிறேன்!
ஹம்ம்ம்! நீ மூன்றாவது டம்ளரை மறந்து விட்டாய் தம்பி!


ஓ யெஸ்! அதில் என்ன இருந்தது?
ஹா! ஹா! ருசியோ - மணமோ இல்லாத ஒருவகை விஷம் இருந்தது! அது மெதுவாகத்தான் வேலையைக் காட்டும்..!
குரூரமான மூளை உனக்கு சேவியர்!
நீ குடித்தது சர்பத் தான் - என்பது பொறுத்திருந்தால் தெரியும்!
உன்னுடைய திட்டத்தில் அடுத்தது என்ன?
அங்கே பார் - மூன்று ஸ்பிரே கேன் உள்ளன! இரண்டில் தீங்கற்ற வாசனைப் பொருள் நிரப்பப் பட்டுள்ளது... மூன்றாவது கேனில்..
..சலபுரிக் ஆசிட்! ஹா! ஹா! இவற்றில் ஏதாவது ஒன்றை எடுத்து உன்னுடைய முகத்தில் ஸ்பிரே பண்ணிக் கொள்! புத்துணர்வுடன் வரலாம் - அல்லது முகம் முழுவதும் எரிந்து வேதனையுடன் சாகலாம்! நீ என்ன செய்யப் போகிறாய்?
உன்னுடைய பழி வாங்கும் படலம் படு சூப்பர்! ஆனால் இதிலும் நான் துணிந்து இறங்கப் போகிறேன்!
செய்வதறியாது திகைத்த ஜானி, இறுதியில் ஒரு ஸ்பிரேயரைத் தேர்ந்தெடுத்தார்..
ஹ்ம்ம்ம்! தைரிய சாலிதான் நீ!
உயிரைப் பணயம் வைக்கத் துணிந்து விட்டாய்! குட்! குட்!


கொடூரமான தண்டனைதான்! ஆனாலும் என்னுடைய அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்க்கப் போகிறேன். எது நேர்ந்தாலும் - சரி!
பல்லை இறுகக் கடித்துக் கொண்டு ஸ்பிரேயரின் பட்டனை ஜானி அமுக்கினார்.
ஆஆ!!!
புஷ்
என்ன நடந்தது? உன் முகம் வெந்து விட்டதா?
நோ. ஆனால் வெந்திருக்கும் என நினைத்தேன்...
நிச்சயமாக அதிர்ஷ்ட தேவதையே உன் பக்கம் தான்! மூன்று சோதனைகளில் இரண்டில் வெற்றி பெற்று விட்டாய்! என்னுடைய பாராட்டுக்கள்!
சட்டத்திற்குப் புறம்பாக செயல்படுவதை நான் வெறுக்கிறேன் தான்- ஆனால் இப்போது உன்னைக் கொலை பண்ண வேண்டுமென்ற வெறியைக் கட்டுப்படுத்த முடியவில்லை!
ஹா! ஹா! ஹா! உணர்ச்சி வசப்படக் கூடாது! ஆனால் மூன்று சோதனைகளிலும் நீ வெற்றி பெற்று விட்டால் உனக்கு விடுதலை. சொன்ன சொல்லை நான் காப்பேன்!
மூன்றாவது, சோதனை என்ன?


நீ விஷம் மற்றும் ஆசிட் சோதனைகள் இரண்டிலும் வெற்றிகரமாகத் தேர்வு பெற்று விட்டாய் - எஞ்சி இருப்பது இதுதான்!
இங்கு மூன்று மின்சார ஒயர்கள் உள்ளன... ஒன்றில் மின்சாரம் புாய வில்லை... மற்றொன்றில் லேசாக அதிர்ச்சி தரும் மின்சாரமே பாய்கிறது.. பிரிதொன்றில் உயர் அழுத்த மின்சாரம் பாய்கிறது!
இந்தச் சோதனைக்கு ஆளாக வேண்டும் என்று கட்டாயம் இல்லை! ஒரு வார்த்தை சொன்னால் எல்லாவற்றையும் இத்துடன் முடித்து விட்டு உன்னை வேதனையின்றிப் பரலோகம் அனுப்புகிறேன்... எப்படி வசதி?
உயர் அழுத்த மின்சாரம் பாயும் ஒயரை நீ தொட்டு விட்டால்.. கற்பனை செய்து பார்!..மின்சார நாற்காலியில் உட்கார்ந்து சாவைத் தழுவுவது போலிருக்கும்!.. எனவே...
ஹ்ம்ம்ம்.. மூன்றாவது தடவையும் அதிர்ஷ்டம் என் பக்கமிருக்கும் என எதிர்பார்ப்பது தவறுதான்! ஆனல் - அதையும் தான் பார்க்கலாமே!


ஐயோ!
அசாத்திய சாதனை! லேசான மின் அதிர்வுதான்!
நீ.. நீ.. நாசமாய் போக சேவியர்!
மூன்று தடவையும் அதிர்ஷ்டம் உன்க்கு சாதகமாகவே அமைந்து விட்டது! சாத்தானின் தீர்ப் பிலிருந்து வெற்றி பெற்ற அரிய மனிதன் நீ!
கமான், உனக்கு எதுவும் ஏற்பட வில்லையா? மெல்ல உயிர் குடிக்கும் விஷம் ஒன்றும் செய்ய வில்லையா?
நோ!
அதிர்ஷ்டம் உன் பக்கம் தான்! ஆனால்... நான் சொன்ன வார்த்தை களை நம்பி விட்டாயே. அதுதான் உன் துரதிர்ஷ்டம்!
கொடுத்த உறுதி மொழியை நான் நிறைவேற்றுவேன் என எதிர்பார்க் கிறாயா?
நீ எந்த வகையிலும் மாறவில்லை என்று தெரிகிறது சேவியர்!


மூன்று சோதனைகளிலும் நீ வெற்றி பெற்று விட்ட போதிலும் கடைசியாக சோதனை ஒன்றை வைத்துள்ளேன்! இந்த முறை இதி லிருந்து நீ தப்பவே முடியாது!
இந்தக் கிணறு பூமிக்கடியில் ஓடும் ஆற்றுடன் இணைக்கப் பட்டுள்ளது..
கடைசி சோதனையே தண்ணீர்தான். என்..
நோ! நான் எப்படி நினைக்கவில்லை!
இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.. ஆசிட் குளியல் அல்லது - வாசனை திரவம்:. உன் அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்க்கலாமா?
நோ... நோ...!
முதுகெலும்பில்லாத கோழை நீ! உன் துப்பாக்கியை எடு!
ச - சரி!


நோ... இந்தா பிடி துப்பாக்கியை!
ஜாக்கிரதை! ஏதாவது வாலாட்டினால் - பொசுக்கி விடுவேன்!
வெரி குட்! இங்குள்ள மூன்று முண்டங்களையும் கையை உயர்த்தச் செய்!
ஹா! ஹா! ஹா!
ஒரு விஷயத்தைக் கவனிக்காமல் விட்டு விட்டாய் மை டியர்! இந்த துப்பாக்கியில் தோட்டாக்கள் எதுவும் நிரப்பப் படவில்லை! ஆனால் என் நண்பர்களிடம் இருக்கும் துப்பாக்கிகளில் நிறையவே குண்டு உள்ளது! இது எப்படி இருக்கு?
பொய்!
நோ! இது வரை நடந்தது அத்தனையுமே உன் மனோ தைரியத்தை உருக்குலைக்கச் செய்வதற்கான நாடகமே!
டம்ளர்கள் எதிலும் விஷம் வைக்கப்படவில்லை - ஸ்பிரேயர்களில் ஆசிட் இல்லை - அதே போல உயர் அழுத்த மின்சார ஒயரும் அங்கு வைக்கப்படவில்லை!



நூதனமான சித்ரவதை! அதனால் அற்புதமான காட்சியைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது! அதற்காக நன்றி! போதுமான அள விற்கு நாங்கள் சிரித்து விட்டோம். அதோ அங்கே ஒரு கோணிப் பை இருக்கு தெரிகிறதா?
யெஸ். அதில் என்ன இருக்கிறது?
பழங்காலத்துத் தந்திரம் இது! அரேபியர்கள் தங்களுடைய எதிரிகளை சாக்கினுள் ஒரு பூனையோடு சேர்த்துப் போட்டு மூட்டையாகக் கட்டி தண்ணீரில் போட்டு விடுவார்களாம்!
அவ்வாறு செய்வதற்கு இப்போது என்னிடம் பூனை இல்லை.. ஆனால் அந்த வேலையை இந்த நாய் செய்து விடும்!
நீ - நீ - ஒரு..
...சைத்தான்! யெஸ்! ஆனால் நான் இன்னும் உன்னிடம் வேடிக்கை காட்டுகிறேன்... இப்போது சொல் - இப்படி உன்னைத் தவிக்க வைத்து பழி தீர்ப்பது 2 லட்சத்திற்கு சமம் தானே?
சரியான பேரம் தான்!
என் திட்டம் முடிந்து விடவில்லை! உன்னுடைய விடுதலைக்காக, உன்னுடைய பத்திரிகையிலிருந்து பணயப் பணம் கேட்கப் போகிறேன்!



உன்னுடைய விடுதலைக்காக அவர்கள் பணம் தர மறுத்துவிட்டால், இதுவரை நடந்த அத்தனை சோதனைகளையும் நிஜமாகவே நடத்துவேன் - ஜாக்கிரதை!
என்னிடமிருந்து நீ விடுதலை யடைந்து போனால் கூட இந்த நூதன சித்ரவதையின் தழும்புகள் உன் மனதை விட்டு எளிதில் விலகியிருக்காது! இனி காலம் முழுவதும் நீ ஒரு கோழையாக - குழம்பிப் போயே அலைவாய்! உன் தலையெழுத்தையே மாற்றி எழுதிட்ட பிரம்மா நான்! ஹா! ஹா! ஹா!
டாம் பையா.. அவனைக் கடித்துக் குதறு!
மறுகணம்
அம்மாடி...
ஜொள்!
ஆஆஆ!
ஹாண்ட்ஸ் அப்! யாரும் அசையக் கூடாது!



இப்போது ஆட்டம் நிஜமாகவே தலைகீழாகி விட்டது என்று நினைக்கிறேன்- சேவியர்!
ஆ - ஆனால் நா- நாய் எப்படி உன் பேச்சிற்குக் கட்டுப்பட்டது?
நாய் நன்றியுள்ள ஜீவன் என்பதை மறந்து விட்டாய் சேவியர்! உங்கள் காரியம் முடிந்து விட்டது என்பதால் நாயை உதறித் தள்ளி விட்டீர்கள்!"
அதனிடம் நான் பரிவாக நடந்து கொண்டதால் அது என்னை நண்பனுக ஏற்றுக் கொண்டது! எனக்கு சிக்கல் என்பதைப் புரிந்து கொண்டு என் உதவிக்கு வந்தது!
என் தலையெழுத்தை மாற்ற வந்த பிரம்மா என்று மார் தட்டினயே... உன் தலையெழுத்தை இந்த நாலு கால் நண்பன் மாற்றி விட்டானே?
முற்றும்.

# புக் - மார்கெட்

## விற்பனைக்கு

லயன்

1 பழி வாங்கும் பொம்மை
2 மாஸ்கோவில் மாஸ்டர்
3 பாட்டில் பூதம்

திகில்

4 பற்றி எரியும் பாலைவனம்
5 நதியில் ஒரு நாடகம்
6 நரகத்தின் எல்லையில்
7 விசித்திரப் போட்டி

தொடர்பு கொள்க :

A. முருகவேல் பாண்டியன்
S/o. A. M. M. அம்பிகாபதி,
அழகாபுரி புதுப்பட்டி (P.O.)
மதுரை dt.

## விற்பனைக்கு

1. மரணப்பயணி
2. ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி
3. யார் அந்த ஜூனியர் ஆர்ச்சி?
4. இராட்ச்ஸக் குள்ளன்
5. ஸ்பைடர் படை
6. கத்தி முனையில் மாடஸ்டி
7. அதிரடி வீரர் ஹெர்குலஸ்

## தேவை

1. டிராகன் நகரம்
2. தலை வாங்கிக் குரங்கு
3. ஆப்பிரிக்க சதி
4. உலகப் போரில் ஆர்ச்சி
5. சைத்தான் சாம்ராஜ்யம்

தொடர்பு கொள்க :

R. ரஞ்சித்,
171, காந்தி ரோடு,
ஸ்ரீபெரும்புதூர் - 602 105.

## தேவை

1 இரத்தப் படலம் - I
(எப்படி இருப்பினும்)
2 இரத்தப் படலம் - II
(லயன் சூப்பர் ஸ்பெஷலோடு
இணைந்து இருக்கும்)

வாங்க விரும்பும் வாசகர் :

க. விஜயகுமார்,
50, தெற்குத் தெரு,
விருத்தாசலம் - 606 001

## தேவை

1. யார் அந்த மினி ஸ்பைடர்?
2. யார் அந்த ஜூனியர் ஆர்ச்சி?
3. நீதிக் காவலன் ஸ்பைடர்
4. புரட்சித் தலைவன் ஆர்ச்சி
5. பாதாளப் போராட்டம்
6. சதுரங்க வெறியன்

தொடர்பு கொள்க :

தி. ரமேஷ் குமார்,
1, [illegible] தெரு, K.K. நகர்,
[illegible] பெருங்களத்தூர், சென்னை - 63.




இன்ஸ்பெக்டர் டேஞ்சருக்கு எப்படித் தெரிந்தது? கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!